சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.14.08.2024
OS.No. 151/2020
PW2 : பாலசந்திரன் (வயது 39 ) த/பெ.கணேசன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு முன்பு எனது சகோதரர் 1 ஆம் வாதி சுகுமார் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். எனது சகோதரர் வா.சா.1 சாட்சியம் அளித்த விவரங்களை நான் தெரிந்து கொண்டேன். எனது தாத்தாவின் பெயர் வடமலை (எ) நடேச உடையார் என்றால் சரிதான். குணசேகர் எனது சித்தப்பா. அவரை சுப்பிரமணியன் (எ) குணசேகர் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து வாய்கறாராக எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்று நாங்கள் கட்சி செய்கிறோம் என்றால் சரிதான். எனது அப்பாவை ஏன் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவருக்கு வயதாகிவிட்டது மற்றும் அவர் ஓர் இருதய நோயாளி. எனது தகப்பனாருக்கு தாவா சொத்து வாய்மொழியாக எந்த வருடம் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. எனது தகப்பனாருக்கு வாய்மொழியாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் தாவா சொத்தை தவிர்த்து பெறப்பட்ட மற்ற சொத்துக்களுக்கு எனது தகப்பனார் பெயரில் வருவாய் பதிவுகள் ஏற்பட்டுவிட்டதா என்றால் ஏற்பட்டுவிட்டது. தாவா சொத்துக்கு எனது தகப்பனார் பெயருக்கு ஏன் வருவாய் பதிவு மாற்றம் ஏற்படவில்லை என்றால் அதற்கான காரணம் தெரியவில்லை. ஆனால் UDR பதிவுகளில் எனது சித்தப்பா பெயர் பதிவு ஏற்பட்டுள்ளது. UDR பதிவு ஏற்பட்ட சமயத்தில் மேற்படி பதிவுகள் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் UDR பதிவுகளை மாற்றுவதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எனது தகப்பனாருக்கு எழுத படிக்க தெரியாது மற்றும் UDR பதிவு ஏற்பட்ட விவரம் பற்றி 2020 ல் தான் எங்கள் அனைவருக்கும் தெரியும். 26.05.2006 ல் தாவா சொத்தை எனது சித்தப்பா 1 ஆம் பிரதிவாதிக்கு கிரயம் ஏற்படுத்தினார் என்றால் சரிதான், அது பற்றி எங்களுக்கு 2020 ல் தான் தெரியும். 1 ஆம் பிரதிவாதி தாவா சொத்தை தனது மனைவியான 2 ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் நீதிமன்றத்திற்கு வரும்போது தான் 2020 ல் அதை பற்றி தெரிந்து கொண்டோம். 2006ம் வருடம் கிரயம் பெற்ற 1 ஆம் பிரதிவாதி தான் தொடர்ந்து தாவா சொத்தில் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது வாக்குமூலத்தில் 1 ஆம் பிரதிவாதி மறுபயன் கொடுக்காமல் தாவா சொத்தை சித்தப்பாவிடமிருந்து கிரயம் வாங்கியுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு, மறுபயன் பெற்றுக்கொள்ளாமல் 1 ஆம் பிரதிவாதி கிரயம் வாங்கியதாக கூறும் விவரம் பற்றி எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது அண்ணன் 1 ஆம் வாதி சொன்னார். எனது அண்ணன் 1 ஆம் வாதிக்கு எப்படி தெரியும் என்றால் அது பற்றி அவரை தான் கேட்கவேண்டும். எனது சித்தப்பா அதே ஊரில் அவருக்கு பாத்தியப்பட்ட

புல எண்.145/1 நிலத்தை பிச்சை என்பவருக்கு கிரயமாக கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த நிலத்தை எனது தாயார் சந்திரா பிச்சையிடமிருந்து கிரயமாக வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாயாரும் நாங்களும் ஒரே குடித்தனமாக தான் இருக்கிறோம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1 ஆம் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் இடையே மணல் அள்ளுவது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டதா என்றால் அவர் தான் பிரச்சனை செய்தார், அப்போது தான் வழக்கில் கூறியுள்ள விவரம் பற்றி தெரியும். அந்த பிரச்சனைக்காக தான் 1 ஆம் பிரதிவாதிக்கு எதிராக தாவா வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் குணசேகருக்கு வாய்மொழி பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றும், அவ்வாறு குணசேகர் ஆண்டு அனுபவம் செய்து வந்த சொத்துக்களை தான் 1 ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை பற்றி நன்கு தெரிந்து கொண்டு தான் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதி எனது சித்தப்பாவிடமிருந்து கிரயம் பெறுவதற்கு முன்பு எனது தகப்பனாரிடம் கேட்டு, ஒப்புதல் பெற்ற பின்பு தான் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. கிரயம் பெற்ற காலத்திலிருந்து 1 ஆம் பிரதிவாதியும் செட்டில்மெண்ட் பெற்ற காலத்திலிருந்து 2 ஆம் பிரதிவாதியும் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் தாவா தாக்கல் செய்துள்ளோம் என்பதால் தாவா நிலைக்கத்தக்கதல்ல, வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

/ signed /

பாலசந்திரன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

R MOHANA

Digitally signed by R MOHANA
Date: 2024.08.14 16:11:55 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி